7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஆயத்தீர்வை சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஆயத்தீர்வை சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது

8. அரசினர் தனித் தீர்மானம்.

1971-ம் ஆண்டு அரசியலமைப்பு (24-வது திருத்த) மசோதாவினல் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, " பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு 1971-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (24-வது திருத்த) மசோதாவினல் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின்கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது " என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ள 1971-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (24-வது திருத்த) மசோதாவினல் அரசியல் அமைப்பில் செய்யப்படவிருக்கிற சில திருத்தங்களுக்கு ஏற்பளிக்கும் தீர்மானம் இம்மன்றத்தினல் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன்மொழிந்துள்ளேன்.

அரசியல் அமைப்பில் கண்டுள்ள அடிப்படை உரிமைகளை நீக்கும் வகையில் அல்லது குறைக்கும் வகையில், அரசியலமைப்பின் மூன்ருவது பாகத்தின் விதித்துறைகள் எவற்றையும் திருத்த நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று இந்தியத் தலைமை உயர்நீதி மன்றம் கோலக் நாத் என்பவருக்கும் பஞ்சாப் மாநில அரசுக்கும் இடையே நடைபெற்ற வழக்கில் தீர்ப்பளித்தது. அரசியலமைப்பின் 368-வது பிரிவின் ஓரக்குறிப்பில் சொல்லியுள்ளபடி, அது அரசியலமைப்பைத் திருத்துவதற்கான பல்வேறு நடைமுறைகளைத்தான் வரையறுக்கின்றது; ஆனல், அரசியலமைப்பைத் திருத்தி வெளிப்படையாகவோ, உட்கிடையாகவோ நாடாளுமன்றத்திற்கு அதில் அதிகாரமளிக்கப்படவில்லையெனவும் அது தீர்ப்பளித்தது. அரசியலமைப்பின் மூன்ருவது பாகத்தில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் எதையேனும் நீக்கவோ குறைக்கவோ நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்பதே இத்தீர்ப்பின் விளைவாகும்.